*3*

# கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பலம்

## (மத்தேயு 5:5)

*நீங்கள் பொறுமையற்றவர்களாக, சகிப்புத்தன்மை இல்லாதவர்களாக அல்லது காட்டமான உணர்வு கொண்டவர்களாக இருக்கிறீர்களா? அப்படியென்றால், கூடுதல் மகிழ்ச்சிக்கு மூன்றாவது அவசியமான விஷயத்தை இயேசு தருகையில் அதைக் கவனியுங்கள்: "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (மத்தேயு 5:5). மக்களில் பலர்* KJV *வேதாகம வார்த்தைக்குப் பழக்கமானவர்களாக உள்ளனர்:* "Blessed are the meek: for they shall inherit the earth."[1]

*உலகமானது மென்மையாகவும் சாந்தமாகவும் இருப்பதற்கு சிறிதளவே மதிப்பை இணைக்கிறது. உலகத்தின் பாக்கியங்கள் பெரும்பாலும் பின்வருவது போன்று இருக்கின்றன: "தங்களைத் தாங்களே உறுதிப்படுத்துகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தங்கள் வழியைப் பெற்றிருப்பார்கள்"; "தங்களைத் தாங்களே முன்னேற்றிக் கொள்பவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் கவனிக்கப்படுவார்கள்"; "உக்கிரமானவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் வெற்றியடைவார்கள்." இருந்த போதிலும், இயேசு "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்று சொன்னார்.*

*அந்த வாக்குத்தத்தத்தின் - "அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" என்ற - கடைசிப்பகுதியானது, கற்பனைகளுக்கு எரிபொருளைக் கொடுத்து கணிசமான அளவுக்கு நேரெதிர்க் கருத்துக்களை உண்டாக்கியுள்ளது. மென்மையும் சாந்தமும் உள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று இயேசு கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? மற்றும், மென்மையும் சாந்தமும் நமது மகிழ்ச்சியான நிலைக்கு என்ன செய்வதாக உள்ளன? நாம் இந்தக் கேள்விகளை இந்தப் பாடத்தில் ஆழ்ந்து சிந்திப்போம்.*

## *"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..."*

**விளக்கம்**

*முதலில் நாம்,* NASB *வேதாகமத்தில்* "gentle" *என்றும்* KJV *வேதாகமத்தில்* "meek" *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் வேதாகமரீதியான அர்த்தத்தைத் தீர்மானித்தல் அவசியமாக உள்ளது. இந்தப் பாடத்தொடரில் முந்திய எடுத்துரைப்புக்களைப் போலின்றி, நாம் இதை நேர்மறையைக் கொண்டு தொடங்கி பின்பு எதிர்மறைக்குச் செல்வோம்: முதலில் நாம், கிரேக்க வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது என்று காண்போம், பின்பு நாம் அது எதை அர்த்தப்படுத்துவது இல்லை என்பதைச் சிந்திப்போம்.*

*"மென்மையான தன்மை/சாந்த குணம்"* என்றால் என்ன? *Praus* என்பதே "gentle," "meek" அல்லது சாந்தகுணம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையாக உள்ளது. ஜோசப் ஹென்றி தாயெர் என்பவரின் அகராதி, *praus* என்பதை "மென்மையான, இதமான, சாந்தமான" என்று விளக்கப்படுத்துகிறது.[2] அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322) என்ற கிரேக்கத் தத்துவஞானி, *praus* என்பது "மோசமான மனநிலை" மற்றும் "முதுகெலும்பற்ற திறமையின்மை" ஆகியவற்றிற்குச் சரியாக மத்தியில் உள்ளது - "உச்சக் கட்ட கோபம் மற்றும் விருப்பு வெறுப்பற்ற தன்மை" ஆகியவற்றிற்கு இடைப்பட்ட களம் - ஆகும் என்று கூறினார்.[3] ஹியூகோ மெக்கார்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> *Praus* என்ற வார்த்தை மிருகங்களுக்குப் பயன்படுத்தப் பட்டபோது கிரேக்கர்கள், பழக்கப்படுத்துதல் என்ற அர்த்தத்தைக் கொண்டிருந்தனர். இந்த வார்த்தையை அவர்கள் ஒலிக்குப் பயன்படுத்தியபோது, அது மென்மை யானதாகவும் மிருதுவானதாகவும் இருந்தது என்று அர்த்தப்படுத்தினர். இதை அவர்கள் நபர்களுக்குப் பயன்படுத்தியபோது, மக்கள் சாந்தமாகவும் மென்மையாகவும் இருந்தனர் என்று அவர்கள் அர்த்தப்படுத்தினர்.[4]

*Praus* பற்றிய நமது கலந்துரையாடலை, மென்மையாக இருத்தலுக்கான அவசியத்தைக் குறிப்பிடுதலைக் கொண்டு நாம் தொடங்குவோமாக. கிறிஸ்தவர்கள் "உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், *சாந்தத்தையும்*, நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு" இருக்க வேண்டும் (கொலோசெயர் 3:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நாம் சுவிசேஷத்தைப் போதித்து, இழந்து போகப்பட்டிருப்பவர்களை மீட்க முயற்சி செய்கையில், அதை நாம் "சாந்தமுள்ள ஆவியோடே" செய்யவேண்டும் (கலாத்தியர் 6:1; காண்க 2 தீமோத்தேயு 2:25; 1 பேதுரு 3:15). "மென்மைத்தன்மை" என்பது *praus* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டில் நாங்கள், பெரும்பாலும் இதன் தோற்றக்கால அர்த்தத்தை இழந்துபோன வார்த்தை ஒன்றைக் கொண்டுள்ளோம்: "gentleman." இன்றைய நாட்களில் இவ்வார்த்தையானது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறிக்கவே முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் ஒருகாலத்தில் இது பிறருடன் பழகுவதில் உண்மையிலேயே மென்மையாக இருந்த மனிதரைக் குறித்தது. நாம் யாவரும் மென்மையான ஆண்களாக[5] மற்றும் மென்மையான பெண்களாக இருக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது.

சாந்தகுணம் என்பது *praus* என்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்கும் இடமாக உள்ளது, ஆனால் இது முடிவாக இருப்பதில்லை. பழைய ஏற்பாட்டில் மேசியாவைக் குறித்துப் பின்வரும் தீர்க்கதரிசனம் தரப்பட்டது:

> சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் *தாழ்மையுள்ளவரும்,* கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார் (சகரியா 9:9; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இவ்வசனப் பகுதி, எருசலேமிற்குள் இயேசுவின் வெற்றிப் பிரவேசத்தில் நிறைவேற்றப்பட்டது. மத்தேயு தமது சுவிசேஷத்தில், இந்தத் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காண்பித்தார், ஆனால் அவர் "தாழ்மை" என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தியுள்ள வார்த்தையைக் கவனியுங்கள்:

> இதோ, உன் ராஜா *சாந்தகுணமுள்ளவராய்* (*praus* என்பதிலிருந்து வந்த வார்த்தை), கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் (மத்தேயு 21:4; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

சகரியா ''தாழ்மையுள்ளவரும்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்திய இடத்தில், மத்தேயு ''சாந்தகுணமுள்ளவராய்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். சாந்தகுணம்/எளிமை என்பது தாழ்மையின் பகுதிக்கூறாக இருந்துள்ளது. யாக்கோபு 1:21ல் NASB வேதாகமம், *praus* என்பதன் பெயர்ச்சொல் வடிவத்தை "சாந்தமாய்" என்று மொழிபெயர்க்கிறது: "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்." W. E. வைன் என்பவர், "தாழ்மையான இருதயமே எளிமையுள்ளதாகவும் சாந்தமுள்ளதாகவும் இருக்கிறது"[6] என்று குறிப்பிட்டார். சகரியா 9:9ல் "தாழ்மையுள்ளவரும்" என்பதற்குப் பதிலாக KJV வேதாகமத்தில் "lowly" என்றுள்ளது, எனவே எளிமையை மெக்கார்டு என்பவர், "மென்மையான தாழ்மை" என்று விவரித்தார்.[7]

*Praus* என்ற வார்த்தையைப் பற்றி, இயேசு தமது சிந்தையில் மென்மைத்தன்மை மற்றும் தாழ்மை ஆகியவற்றைக் கொண்டிருந்தார் - ஆனால் நமது புரிந்துகொள்ளுதல் இன்னும் முழுமையாவதில்லை. *Praus* என்ற வார்த்தையில் ஒப்புக்கொள்ளத் தக்கவகையில் இருத்தல், இணங்குதல் மற்றும் இசைந்து போகுதல் என்ற பண்பும் உள்ளது. இப்படிப்பட்ட ஆவியைக் கொண்ட ஒரு நபர், கர்த்தருக்கு இணங்க மனவிருப்பமாக இருக்கிறார். வைன் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> [*Praus* என்பதன் சொல்விளக்கங்கள்] முதலாவதாகவும் முதன்மையாகவும் *தேவனை* நோக்கியவையாக உள்ளன. இது, நம்முடன் தேவனுடைய செயல்பாடுகள் நல்லவை என்பதால் அதைக்குறித்து வழக்காடாமல் அல்லது அதை எதிர்த்து நிற்காமல் நாம் ஏற்றுக்கொள்ளும் ஆவியின் உணர்வாக உள்ளது; அது … தேவனுக்கு எதிராகப் போரிடுவதில்லை மற்றும் … போராடி அவருடன் மனநிறைவு கொண்டுள்ளது.[8]

கிரேக்க அகராதி ஒன்று, "[மத்தேயு] 5:5ல், சுதந்திரம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள சாந்தகுணமுள்ளவர்கள், தேவனுடைய மாபெரும் மற்றும் கிருபையுள்ள சித்தத்தை ஒப்புக்கொள்பவர்களாக உள்ளனர்" என்று கூறுகிறது.[9]

இந்தப் பாடத்தொடரில் நாம், பாக்கியங்களின் தர்க்கரீதியான வளர்நிலையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஒருவர் தம்மை ஒன்றுமில்லை என்று காண்கிறார் (முதல் பாக்கியம்) மற்றும் ஒவ்வொன்றிலும்

தேவனை எல்லாமுமாகக் காண்கிறார். அவர் தமது ஆவிக்குரிய நிலைபற்றி புலம்புகிறார் (இரண்டாவது பாக்கியம்), அது அவர் மனம்திரும்பி தேவனை நோக்கித் திரும்பக் காரணமாகிறது. பின்பு அவரது ஆவிக்குரிய எளிமையும் ஆழ்ந்த வருத்தமும், மென்மையான, சாந்தகுணமுள்ள, இணக்கமுள்ள ஆவியை விளைவிக்கிறது (மூன்றாவது பாக்கியம்), இது தேவனுடைய சித்தத்தைக் கேள்வியின்றி ஏற்றுக்கொள்கிறது.

தேவனிடத்தில் இணக்கமுள்ள ஆவியைக் கொண்டிருத்தல் என்பது மற்றவர்களுடன் நமது உறவுகளுக்கும் பயன் அளிக்கிறது. கிறிஸ்தவர்கள் "ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் *சாந்தகுணத்தைக்* (*praus* என்பதன் ஒரு வடிவம்) காண்பிக்கவும்" அவர்களுக்கு நினைப்பூட்டும்படி தீத்துவுக்குப் பவுல் கூறினார் (தீத்து 3:1, 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மென்மையான/சாந்தகுணமுள்ள கிறிஸ்தவர் தமது சொந்த வழியைக் கொண்டு இருத்தலை வலியுறுத்திக் கொண்டிருக்கமாட்டார். அவர், மற்றவர்களின் தேவைகளையும் உணர்வுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்.

அப்படியென்றால், மத்தேயு 5:5ன் மென்மைத்தன்மை அல்லது சாந்தகுணம் என்பதை நாம் எவ்வாறு விளக்கப்படுத்தலாம்? அது தேவனுடைய சித்தத்திற்கு இணைக்கமாக உள்ளதும் மற்றவர்களிடம் இரக்கத்துடன் நடந்து கொள்கிறதுமான தாழ்மையான ஆவியாக உள்ளது.

*"மென்மைத்தன்மை/சாந்தகுணம்" என்பது என்னவாக இருப்பதில்லை.* *Praus* என்றால் என்ன என்று கலந்துரையாடியுள்ள நிலையில் நாம், *praus* என்பது என்னவாக இருப்பதில்லை என்பதைப் பற்றிய பல முடிவுகளை அடையத் தயாராக இருக்கிறோம். முதலாவது, *praus* என்பது ஒரு *பலவீனமான* குணம் அல்ல என்பது இப்போது தெளிவாகி இருக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு, பெரும்பான்மையான மக்கள் KJV வேதாகமத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தபோது, அதில் உள்ள "meek" (சாந்தகுணம்) என்ற வார்த்தை குறித்துச் சிலர் வியப்படைந்தனர். அவர்களைப் பொறுத்த மட்டில், சாந்தமாக இருத்தல் என்பது, ஒரு நபர் கூச்சசுபாவம் உள்ளவராக இருந்து தமக்காக எழுந்து நிற்க அச்சப்படுபவராக, தம்மை மக்கள் தவறாக நடத்தவும் தம்மிடமிருந்து அனுகூலம் பெற்றுக்கொள்ளவும் அனுமதிப்பவராக இருத்தல் என்பதை அர்த்தப்படுத்திற்று. நவீன மொழிபெயர்ப்புகள் - NASB வேதாகமத்தில் உள்ள "gentle" என்பதைப் போன்று - மற்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றன, ஆனால் பெரும்பான்மையானவர்கள், மென்மையான குணம் கொண்ட ஒரு நபரை, பலமான நபருக்கு எதிர்நிலையில் இருப்பவராகக் கண்ணோக்குவர்.

கிரேக்கர்கள் *praus* என்ற வார்த்தையை, மிருகங்களைப் *பழக்கப்படுத்துவதற்குப்* பயன்படுத்தினர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மிருகங்களைப் பழக்கப்படுத்துதல் பற்றி நான் நினைக்கும்போது, காட்டுக்குதிரையை சவாரி செய்ய ஏற்றதாக்குதல் பற்றி நினைத்துப் பார்க்கிறேன். ஒரு குதிரை சவாரி செய்ய ஏற்றதாக்கப்படும்போது, அதனுடைய பலம் எதுவும் அழிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, அந்தக் குதிரையின் பலமானது *கட்டுப்படுத்தப்படுகிறது.* மத்தேயு 5:5ன் மென்மைத்தன்மை/சாந்தகுணம் என்பது "கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பலம்" என்பதாக நினைக்கப்பட முடியும்.[10] கர்த்தருடனான நமது உறவைப் பொறுத்தமட்டில், *praus* என்பது

“பயபக்தியினால் பழக்கப்படுத்தப்பட்ட பலம்” என்று விளக்கப்பட முடியும்.

இரண்டாவதாக, *praus* என்பது, தவறானதும் ஒழுக்கவீனதுமாக இருந்தாலும், எந்த விஷயத்தையும் மற்றும் எல்லா விஷயத்தையும், சகித்துக்கொள்ளுகிற மன எண்ணப்போக்காக இருப்பதில்லை. மக்களில் சிலர், எவரொருவருடனும் ஒருக்காலும் கருத்து வேறுபடாதிருப்பதால், அவர்கள் சாந்த குணம் அல்லது மென்மைத்தன்மை கொண்டவர்கள் என்று நினைக்கப்படுகின்றனர். எவ்வகையான சந்தோஷமற்ற தன்மையையும் தவிர்ப்பதற்கு அவர்கள் மாபெரும் தூரம் செல்கின்றனர். மத்தேயு 5:5ன் மென்மைத்தன்மை/சாந்தகுணம் என்பது சமாதானத்தை நாடுகிற தனிநபரை மறைமுகமாக உணர்த்துகிறது என்பது உண்மையே (காண்க வசனம் 9), ஆனால் இது அவர் பொல்லாங்கிற்குச் செல்லம் கொடுக்கிறார் என்று அர்த்தப்படுவதில்லை. பாவம் மற்றும் தவறு ஆகியவற்றிற்கு எதிர்த்து நிற்கத் தவறுதல் என்பது மென்மையான குணம்/சாந்த குணம் அல்ல. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் என்பவரின் கூற்றுப்படி, அது “நெகிழ்ந்ததன்மை” என்பதாக மாத்திரம் உள்ளது.[11]

மூன்றாவதாக, *praus* என்பது மனதின் “இயல்பான” நிலைப்பாடு அல்ல. தனிநபர்கள் சிலர், சாந்தகுணம் மற்றும் மென்மைத்தன்மையின் சில பண்புகளைக் காட்சிப்படுத்துகின்றனர் என்பது உண்மையே. இந்தத் தனிநபர்கள் சிலவேளைகளில் “மென்மையான - நடத்தைப் பாங்குடையவர்கள்” என்று குறிப்பிடப்படுகின்றனர். *Praus* என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்தியபோது அவர் இதைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. அவர்/அவள் அதற்கு “இயல்பாகவே மனப்பற்று” கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய அந்த குணத்தை இயேசு பரிந்துரைத்தார். மேம்படுத்திக் கொள்வதற்குத் தெய்வீக உதவி தேவைப்பட்ட ஒரு பண்பைப் பற்றி அவர் பேசினார். கலாத்தியர் 5:22, 23ல் பவுல், “ஆவியின் கனிகள்” பற்றிப் பேசினார். பவுலின் இந்தப் பட்டியலில் “மென்மையான குணம்” அல்லது “சாந்தகுணம்” என்பது உள்ளடங்கி இருக்கிறது (வசனம் 23). நாம் கர்த்தருக்கு நம்மை இணங்கச் செய்து நமது வாழ்வில் அவரது ஆவியானவர் கிரியை செய்ய அனுமதிக்கும்போதுதான் நாம் வேதாகமரீதியாக மென்மையான குணம்/சாந்த குணம் கொண்டவர்கள் ஆகிறோம்.

**உதாரணங்கள்**

இப்போது நீங்கள் *praus* என்பது ஒரு சிக்கலான வார்த்தையாக உள்ளதைக் காண முடியும். ஒருவேளை, இந்த வார்த்தையின் வேதாகமரீதியான உதாரணங்களை நாம் கண்டால், அது நமக்கு இந்த வார்த்தையைப் பற்றிப் புரிந்துகொள்வதில் உதவும். வேதவசனங்களில் பல உதாரணங்கள் காணப்பட முடியும்,[12] ஆனால் நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து ஒன்றும் புதிய ஏற்பாட்டில் இருந்து ஒன்றுமாக இரு உதாரனங்களுடன் நமது விளக்கங்களை மட்டுப்படுத்திக் கொள்வோம்.[13]

பழைய ஏற்பாட்டில் எண்ணாகமம் 12:3ல் நாம், “மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் (very humble) என்று வாசிக்கிறோம். KJV வேதாகமத்தில் இது, “மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் (*very meek*) என்றுள்ளது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில்,

இவ்வசனத்தில் மோசேயைப் பற்றி விவரிக்க *praus* என்ற வார்த்தையின் ஒரு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மோசேயைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளதைப் பற்றி நினைத்துப்பாருங்கள். அவர் உயிருள்ள மனிதர்களிலேயே மிகவும் சாந்தகுணமுள்ளவராக இருந்தார், ஆனால் அவர் பலவீனமானவராக இருந்தாரா? பலவீனமான ஒரு மனிதர், எகிப்தில் இருந்து முப்பது இலட்சம் மக்களை வழிநடத்தி இருக்க முடியுமா? மோசே மென்மையும் சாந்தகுணமும் கொண்டிருந்தார், ஆனால் அவரது உணர்வு பற்றி எரிந்த சந்தர்ப்பங்களை நான் நினைத்துப் பார்க்கிறேன்.[14] சாந்தகுணம் என்பது அவரது *இயல்பான நிலைப்பாடாக* இருந்தது என்பது பற்றி நான் சந்தேகப்படுகிறேன். இருந்தபோதிலும் அவர், நாம் கலந்துரையாடியுள்ள பண்புகளைக் கொண்டிருந்தார். தமது ஆவியைத் தேவனுடைய ஆவியுடன் இணங்க செய்திருந்தார், மற்றும் அது அவர் மற்றவர்களை நடத்திய விதத்தின்மீது செயல்விளைவை ஏற்படுத்தியிருந்தது. தேவனுக்குக் கீழ்ப்படியாமை என்பதை எதிர்த்து நின்றபோது, அவர் மென்மையாகவோ அல்லது சாந்தமாகவோ இருக்கவில்லை, ஆனால் இன்னமும் அவர் சாந்த குணம் என்ற பண்பைக் கொண்டிருந்தவராக விளக்கி உரைக்கப்பட்டார்.

மோசேயின் வாழ்வில் இருந்து இரு நிகழ்ச்சிகள் போதுமானவையாக இருக்கும். எண்ணாகமம் 11ல், பாளையத்தில் இரு மனிதர்கள் தீர்க்கதரிசனம் கூறிக்கொண்டிருப்பதை அறிக்கும்படி மோசேயிடம் ஒரு இளைஞன் ஓடிவந்தான் (வசனங்கள் 26, 27). மேட்டிமையுள்ள ஒரு நடத்துனர், “அவர்களுக்கு அனுமதி கொடுத்தது யார்?” என்று மறுப்புரை கூறியிருப்பார். யோசுவா, “என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும்” (வசனம் 28) என்று கூறினார். மோசே தாழ்மையுடன், “நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே” என்று பதில் அளித்தார் (வசனம் 29).

(மோசேயின் தாழ்மை/எளிமை பற்றி நாம் வாசிக்கும் அதிகாரமான) 12ம் அதிகாரத்தில், மிரியாம் மற்றும் ஆரோன் ஆகியோர் தங்கள் சகோதரர் (மோசேயை) பற்றிக் கடுமையாகப் பேசினர் (வசனங்கள் 1, 2). அவ்விருவரையும் கர்த்தர் கடிந்துகொண்டார் (வசனங்கள் 4-9) மற்றும் விமர்சனத்தின் தலைவியாக இருந்தாள்[15] என்று தெளிவாகத் தெரிந்த மிரியாமை அவர் தண்டித்தார் (வசனம் 10). நான் மோசேயாக இருந்திருந்தால், “அது அவளுக்கு தரப்பட வேண்டியதற்கு அதிகமானதல்ல” என்று கூறி இருப்பேன். அதற்குப் பதிலாக அவர் தமது சகோதரிக்காக ஜெபித்தார்: “என் தேவனே, அவளைக் குணமாக்கும்” (வசனம் 13). மோசே அவ்வளவு பெரிய நடத்துனராக இருந்ததில் வியப்பு எதுவும் இல்லை.

புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பும்போது நாம், எந்த இடத்திலும், எல்லாக் காலத்திலும் மென்மைத்தன்மை/எளிமைத்தன்மை ஆகியவற்றிற்கான மாபெரும் உதாரணத்தைக் கண்டறிகிறோம்: இயேசு கிறிஸ்து. முன்னதாக நாம், மேசியா “சாந்தகுணமுள்ளவர்” (*praus*) என்று குறிப்பிடுகிற மத்தேயு 21:4ஐ வாசித்தோம். 2 கொரிந்தியர் 10:1ல் பவுல், “கிறிஸ்துவின் சாந்தத்தையும் (*praus* என்பதில் இருந்து வருகிறது) தயவையும்” பற்றிக் குறிப்பிட்டார். இயேசு தாமே, “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்” என்று சொன்னார் (மத்தேயு 11:29).

இயேசு பலவீனமானவராக இருந்தாரா? அவருக்கு முன்னால் இராதபடிக்கு, தேவாலயத்தில் இருந்த காசுக்கடைக்காரர்கள் சிதறடிக்கப்பட்டதைக் பற்றி நினைத்துப் பாருங்கள் (யோவான் 2:13-17). இயேசு பொல்லாங்கைச் சகித்துக் கொண்டிருந்தாரா? அவர் பிரியமற்றிருந்தவைகளை எப்படியாகிலும் தவிர்ப்பதற்கு முயன்றாரா? மத்தேயு 23ல் பரிசேயர்களுக்கு அவர் கொடுத்த கடுமையான பழிப்புரையை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

இயேசு "சாந்தமானவர்" அல்லது "எளிமையானவர்" என்று விவரிக்கப்பட்டது ஏன்? அவர் தமது சித்தத்தைப் பிதாவின் சித்தத்திற்கு முற்றிலுமாக இணங்கச் செய்தார் (யோவான் 6:38; காண்க மத்தேயு 26:39). அவர், தமது தெய்வீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் எல்லாவற்றிலும் இருந்து தம்மையே வெறுமையாக்கி தேவனுக்கும் மனிதகுலத்திற்கும் ஊழியக்காரர் ஆனார் (பிலிப்பியர் 2:5-8). அவர் தம்மைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை, ஆனால் மற்றவர்களைக் குறித்து அக்கறை கொண்டார் (காண்க மத்தேயு 20:28). ஆகவே அவர் இழந்து போகப்பட்டவர்களைக் கையாள்வதில் மென்மையாக இருந்தார். அவர் "பாவிகளுக்கு சிநேகிதன்" என்று அறியப்பட்டிருந்தார்! (மத்தேயு 11:19).

யோவான் 8:1-11ல், இயேசுவின் எளிமைத்தன்மை மற்றும் மென்மைத்தன்மைக்கு, தனிச்சிறப்பான ஒரு உதாரணம் காணப்படுகிறது.[16] வேதபாரகரும் பரிசேயர்களும், இயேசுவை அகப்படுத்தும்படிக்கு, விபசாரம் செய்த ஒரு பெண்ணை அவரிடத்தில் கொண்டு வந்தனர்.[17] அவர்களின் வலையில் இருந்து தப்பிய பின்பு, அந்தப் பெண்ணைக் குற்றம் சாட்டியவர்கள் கலைந்து சென்றனர், அதன்பின்பு அவர் அவளிடத்தில், "ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா?" என்று கேட்டார். அவள் "இல்லை, ஆண்டவரே" என்று கூறினாள். பின்பு இயேசு மென்மையாக, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்று கூறினார் (வசனங்கள் 10, 11). இயேசு பலம் வாய்ந்தவராக இருந்தார், ஆனால் அவரது பலம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அது, தேவன்மீதான பயபக்தி மற்றும் மக்கள் மீதான அன்பு ஆகியவற்றினால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. அதுவே மத்தேயு 5:5ல் கூறப்படும் சாந்தகுணம்/எளிமைத்துவம் பற்றிய யாவுமாக உள்ளது.

### "... அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்"

இந்தப் பண்பைக் கொண்டுள்ளவர்கள் "பாக்கியவான்கள்" என்று இயேசு கூறினார். அவர்கள் கூடுதல் மகிழ்ச்சியைக் கொண்டுள்ளனர். மென்மைத்தன்மை/எளிமைத்தன்மை என்பது மகிழ்ச்சிக்கு என்ன செய்வதாக உள்ளது? முந்திய பாக்கியங்களைப் பொறுத்தமட்டில் உண்மையாக இருந்தது போன்றே, உண்மையில் மகிழ்ச்சியாக இருத்தலுக்கு, எண்ணப்போக்கானது தன்னிலேயே சாதகமானதாக உள்ளது - ஏனென்றால் மென்மையான/எளிமையான நபர், தமது சொந்தத் தேவைகளைக் காட்டிலும் மற்றவர்களின் தேவைகளைப் பற்றி அதிகமாக நினைக்கிறார். ஆகவே, உலகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களைப் போலின்றி, அவர் தமது தேவைகளைச் சந்திப்பதற்கு மற்றவர்களின் தோல்வியின் மீது மனதிருப்தியின்மையால் நிறைந்திருப்பதில்லை. இருப்பினும் நமது வேதவசனப் பகுதியில் வாக்குத்தத்தத்தின் விளைவாக உண்டாகும் மகிழ்ச்சியின் மீதே

வலியுறுத்தம் உள்ளது.

மத்தேயு 5:5ன் வாக்குத்தத்தம், கவனத்தை ஈர்க்கக்கூடியதாக உள்ளது: ''சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ... அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.'' இது அர்த்தப்படுத்துவது என்ன? மென்மையானவர்கள்/எளிமையானவர்கள் எந்தக் கருத்தில் "பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்"?

**இந்த வாக்குத்தத்தம் எதை அர்த்தப்படுத்துவதில்லை**

இந்த வாக்குத்தத்தம், மென்மையாகவும் எளிமையாகவும் உள்ளவர்கள் சட்டப்பூர்வமான வகையில் இந்த பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மென்மைத்தன்மை/எளிமைத்தன்மை பற்றி நாம் கலந்துரையாடிய இரு உதாரணங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: மோசே மற்றும் இயேசு. மெக்கார்டு என்பவர் பின்பருமாறு எழுதினார்:

> இந்த பூமியையே இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று யாரேனும் ஒருவர் நினைக்க வேண்டி இருந்தது என்றால், பூமியில் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் எளியகுணம் கொண்டவராக இருந்த ஒரு மனிதர் இந்த வாக்குத்தத்தத்தைப் பெறத் தவறி விட்டார். மோசே இல்லம் எதுவுமின்றி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டைச் சுதந்தரித்துக் கொள்ளும் நம்பிக்கையுடன் நாற்பது ஆண்டுகள் அளவாக வனாந்தரத்தில் சுற்றித்திரிந்தார், ஆனால் அவர் அதைக் கண்ணால் பார்க்க மாத்திரமே முடிந்தது [உபாகமம் 34:1-5]. இயேசு ஒரு எளிமையான மனிதராக இருந்தார் என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது, இருப்பினும் அவர் பூமியை நேரடியாக சுதந்தரித்துக் கொள்வதிலிருந்து தூரத்தில் இருந்தார். (இயேசு) "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று கூறினார் (காண்க லூக்கா 9:58).[18]

இருந்தபோதிலும் எனது கோப்புக்களில், கிறிஸ்தவர்கள் ஒருநாளில் இந்த பௌதீகரீதியான பூமிக்குரிய சட்டப்பூர்வமான உரிமைப்பெயரைச் சொந்தம்கொள்வார்கள் என்பதில் மக்கள் மனநிறைவு அடையும் கடிதங்களையும் கட்டுரைகளையும் கொண்டுள்ளேன். மத்தேயு 5:5 அவர்களுக்குப் பிரியமான வசனப்பகுதியாக உள்ளது: ''சாந்தகுணமுள்ளவர்கள் (அல்லது எளிமையானவர்கள்) பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.'' எடுத்துக்காட்டாக, தங்கள் முடிவுக்காலக் காட்சியின் பகுதியாக இதை ஏற்படுத்துகிற ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்கள் உள்ளனர். இயேசு இந்த பூமிக்குத் திரும்பி வந்து ஆயிரம் ஆண்டுகள் பௌதீகரீதியான வகையில் ஆளுகை செய்வார் என்று அவர்கள் கூறுகின்றனர். அந்த காலகட்டத்தில் தேவனுடைய பிள்ளைகள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதைத் தவிர, 144,000 பேர் மாத்திரமே பரலோகம் செல்ல, தேவனுடைய மக்களில் எஞ்சி இருப்பவர்கள் இந்த பூமியில் என்றென்றைக்கும் வாழ்வார்கள் என்று போதிப்பவர்கள் உள்ளனர். இந்த நம்பிக்கையைக் கொண்ட இருவர் ஒருநாள் என் கதவண்டைக்கு வந்தனர். அவர்கள், பாவம் மற்றும்

துன்மார்க்கம் ஆகியவற்றிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பூமியைப் பற்றி, மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டிருக்கும் பூமியைப் பற்றி விவரித்தனர். "அது மன எழுச்சியுள்ளதாக இராதா?" என்று அவர்கள் கேட்டனர். அதற்கு நான், "உண்மையில் அது ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கும், நான் *புதிய* வானங்களையும் *புதிய* பூமியையும் முன்னெதிர் நோக்கிக் கொண்டிருந்துள்ளேன் (2 பேதுரு 3:13; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:1), ஆனால் நீங்கள் எனக்கு, ஒட்டுப்போடப்பட்ட, மறுவடிவாக்கப்பட்ட பூமியை அல்லவா வாக்குறுதி அளிக்கிறீர்கள். புதிய உடைக்கும் ஒட்டுப்போடப்பட்ட உடைக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரு சிறுகுழந்தைகூட அறியுமே" என்று பதில் அளித்தேன்.

மென்மையும் எளிமையும் உள்ளவர்கள் பூமியை இப்போது சட்டரீதியாக உரிமை கொள்வார்கள் என்று வேதாகமம் போதிப்பதில்லை; அல்லது அந்தக் கருத்தில் அவர்கள் அதை எதிர்காலத்தில் உரிமைகொள்வார்கள் என்றும் அது கூறுவதில்லை. பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; *அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.*" என்று எழுதினார் (2 பேதுரு 3:10; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

## இந்த வாக்குத்தத்தம் எதை அர்த்தப்படுத்துகிறது

அப்படியென்றால் இந்த வாக்குத்தத்தம் எதை அர்த்தப்படுத்துகிறது? எளிமையும் மென்மையுமாக உள்ளவர்கள் எந்தக் கருத்தில் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்? ஏற்கனவே படித்துள்ள வாக்குத்தத்தத்தின் விஷயம் போன்றே, இந்த வாக்குத்தத்தமும் பூமிக்குரிய இயல்பையல்ல ஆனால் *ஆவிக்குரிய* இயல்பைக் கொண்டுள்ளது. மேசியா பூமியை வெற்றிகொண்டு தங்களுக்கு அதைக் கொடுக்கும் ஒரு இராணுவத் தலைவராக இருப்பார் என்று இயேசுவின் சீஷர்கள் நம்பியிருந்தனர். இயேசு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கூறியபோது (யோவான் 18:36) அந்த நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்தார்.

இருப்பினும், இந்த வாக்குத்தத்தம் ஆவிக்குரிய இயல்புடையது என்று நாம் ஒப்புக்கொண்டாலும், நமது வேதவசனப் பகுதியில் உள்ள "பூமி" என்பது இந்த வாழ்க்கையைக் குறித்ததா அல்லது இனிவரும் வாழ்க்கையைக் குறித்ததா என்ற ஐயத்தை இன்னமும் கொண்டுள்ளது. சிலர் இந்த வாக்குத்தத்தம் இந்த வாழ்விற்கு மாத்திரம் குறிப்புக் கொண்டுள்ளது என்று வலியுறுத்துகின்றனர். மற்றவர்கள் இந்த வாக்குத்தத்தம் இந்த வாழ்வைக் குறிப்பதாக இருக்க முடியாது, எனவே இது இனிவரும் வாழ்வைக் குறிப்பதாக இருக்க வேண்டும் என்று மிகவும் பலமாக வலியுறுத்துகின்றனர். இந்த வாக்குத்தத்தம் இருமடங்கு நிறைவேற்றம் கொண்டிருக்கும் என்று நான் மீண்டும் கருத்துக் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்: இந்த வாழ்வில் ஒருபகுதி நிறைவேற்றமும் இனிவரும் வாழ்வில் முழுமையான நிறைவேற்றமும் கொண்டதாக இருக்கும்.

*இந்த வாழ்வில்.* பழைய ஏற்பாட்டில் தாவீது "சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்" (சங்கீதம் 37:11) என்று கூறியபோது, மத்தேயு 5:5ல் இயேசு பயன்படுத்திய இதே மொழிநடையை அவர் அடிப்படியாகப் பயன்படுத்தினார். KJV வேதாகமத்தில், அவ்வசனத்தின் முதல் பகுதி, மூன்றாவது பாக்கியத்துடன் கொண்டுள்ள ஒற்றுமை இன்னும் அதிகம் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது: "சாந்தகுணமுள்ளவர்கள்

*பூமியைச் சுதந்தரித்து.”* சங்கீதம் 37ல், கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து (வசனம் 3), துன்மார்க்கரை அவர் தண்டிப்பதற்காகப் பொறுமையாகக் காத்திருப்பவர்கள் (வசனங்கள் 7-9) தாழ்மை/எளிமை உடையவர்களாக உள்ளனர். இருப்பினும் (“தேசம்”) [NASB] அல்லது “பூமி” [KJV] என்ற வார்த்தையே நமது மாபெரும் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. சங்கீதத்தில் தேசம்/பூமி என்பது கானானின் தேசம் என்று அறியப்பட்ட புவியியல் பகுதியைக் குறிக்கிறது. தாழ்மையும் எளிமையுமானவர்கள் மாத்திரமே அந்த தேசத்தின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிப்பார்கள் என்று தாவீது வலியுறுத்தினார். அது போலவே, மென்மையும் எளிமையுமானவர்கள் மாத்திரமே இந்த நிகழ்கால பூமியின் ஆசீர்வாதங்களை அதன் முழு விரிவாக்கத்திலும் மகிழ்வுடன் அனுபவிக்கும் திறன் கொண்டுள்ளனர் என்று நான் நம்புகிறேன்.

மென்மையும் எளிமையுமான கிறிஸ்தவர், “இந்த பூமி தரக்கூடிய மிகவும் வளமையான, மிகவும் முழுநிறைவான மற்றும் மிகவும் திருப்திகரமான வாழ்வைச் சுதந்தரிக்கும் அர்த்தத்தில்” இந்த பூமியைச் சுதந்தரிப்பவர்களாக இருக்கின்றனர்.[19] பவுல் தம்மைப் பற்றி, ‘‘ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும்’’ (2 கொரிந்தியர் 6:10) என்று குறிப்பிட்டபோது, அவர் இவ்வகையான வாழ்வைப் பற்றியே பேசினார். கொரிந்தியர்களுக்கு அவர் பின்வரும் உறுதிப்பாட்டைக் கொடுத்தார்:

> ... *எல்லாம் உங்களுடையதே;* பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், *உலகமாகிலும்* ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், *எல்லாம் உங்களுடையது;* நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் (1 கொரிந்தியர் 3:21-23; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

“இந்த உலகத்தின் மதிப்புடைய பொருட்கள் யாவும் சாந்தகுணமுடையவர்களின் உடைமையாக உள்ளன. அவர்கள் சட்டப்பூர்வமாகிலும், ஒரு சதுர அங்குல நிலத்தைக் கூடச் சொந்தமாகக் கொண்டிராது இருக்கலாம், ஆனால் பூமி முழுவதும் யெகோவாவினுடையதாகவும் அதன் வனப்பும் மாட்சியும் மகிழ்வுடன் அனுபவிப்பதற்கென்று தங்களுடையதாகவும் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து அறிந்துள்ளனர்.”[20]

பாக்கியங்கள் பற்றி நான் முதன்முறையாகப் பிரசங்கித்ததற்குச் சற்றுமுன்னால், ஆக்லஹாமாவின் கொமான்ச்சி என்ற இடத்தில் உள்ள சபையின் உறுப்பினர் ஒருவருடைய சவ அடக்க ஆராதனையில் கலந்துகொண்டேன்: அவரது பெயர் ஜுவெல் தாமஸ் என்பதாகும். அவர் ஒரு தாழ்மையான மனிதராக, ஒரு விவசாயியாக இருந்தார். அவரது சவ அடக்கமானது பரந்த இடம் கொண்டு உயர்நிலைப்பள்ளிக் கலையரங்கத்தில் நடைபெற்றது. எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தன, மக்கள் சுவர்களின் அருகாமையில் நின்றுகொண்டும் இருந்தனர். அந்த ஆராதனையில் வாசிக்கப்பட்ட வசனப்பகுதிகளில் ஒன்றாக மத்தேயு 5:5ம் இருந்தது: “சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.” அப்போது முதன் முறையாக இவ்வசனப்பகுதி எனக்கு விசேஷித்த அர்த்தம் உடையதாகிற்று. சகோதரர் தாமஸ் ஒரு பணக்கார மனிதராக இருக்கவில்லை; ஆனால் அவர், முழுசமுதாயத்தின் மதிப்பு உட்பட, இந்த வாழ்வின் உண்மையான ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்திருந்தார். ஜார்ஜ்

மேக்டொனால்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> உலகத்தில் மிகுந்த உடைமையைக் கொண்டிருப்பவர் யார் - ஆயிரம் வீடுகளை உடையவரா அல்லது தமது சொந்தம் என்று கூற ஒரு வீடுகூட இல்லாமல், அவர் கதவைத் தட்டினால் உடனடியாக மகிழ்வை எழுப்பும் வகையில் பத்து வீடுகளைக் கொண்டுள்ளவரா? மிகவும் செல்வந்தர் யார் - திரளான தமது பணத்தைச் செலவழித்து, புகலிடம் இன்றி இருப்பவரா; அல்லது தமது தேவைக்காக ஒரு நூறுபேர் தங்கள் வசதிகளைத் தியாகம் செய்யும் பாக்கியத்தைக் கொண்டிருப்பவரா?[21]

மாபெரும் செல்வங்களைக் கொண்டிருந்தும் பரிதபிக்கப்படத் தக்கநிலையில் உள்ள தனிநபர்களையும், கொஞ்சமே பொருள் கொண்டிருந்து சந்தோஷமாக இருப்பவர்களையும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் அறிந்திருக்கிறோம். உடைமைகள் ஏராளமாக இருத்தல் என்பதல்ல, ஆனால் வாழ்வைக்குறித்த நமது எண்ணப்போக்குதான் நம்மைச் சந்தோஷமாக்குகிறது. டாண் ஹம்ப்ரே என்பவர், "பூமிக்குரிய விஷயங்களை இலேசாகப் பற்றிக்கொண்டு, அவற்றை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் காட்டிலும் தாழ்ந்தவையாக மதிப்பிடுபவர்களுக்கே ஆசீர்வாதங்களின் உண்மையான மகிழ்வு அனுபவம் உள்ளது" என்று குறிப்பிட்டார். சாந்தகுணமுள்ள ஒரு நபர், தமது உடைமைகளினால் பாரப்படுவதில்லை மற்றும் அந்த உடைமைகளை இழந்து போகுதலின் பயத்தினால் பட்சிக்கப்படுவதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.[22]

*இனிவரும் வாழ்வில்.* இந்த பூமி அளிக்கக்கூடிய மிகச்சிறந்தவற்றை, மென்மையும் எளிமையும் உள்ளவர்கள் சுதந்தரித்துக் கொள்ளுதலைப் பற்றி இன்னும் அதிகமாகக் கூறமுடியும், ஆனால் நாம் இனிவரும் வாழ்வை நோக்கி நமது கவனத்தைத் திருப்புவோமாக. மற்ற எல்லா பாக்கியங்களிலும் உள்ளது போன்றே, இந்த வாக்குத்தத்தத்தின் முற்றான நிறைவேற்றம் பரலோகத்தில் இருக்கும். விசுவாச வீரர்கள் பற்றி, எபிரெயர் 11ல் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

> இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள் ... அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே (வசனங்கள் 13-16).

இரு அதிகாரங்களுக்குப் பின்னர் இந்த எழுத்தாளர், "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே (அதாவது பரலோகத்தில் உள்ளதையே) நாடித் தேடுகிறோம்" என்று கூறினார் (13:14; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:2, 10).

ரோமர் 8ல் பவுல் நமது ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பற்றி எழுதினார். நாம், "... தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" என்று அவர் கூறினார் (வசனம் 17). இந்த வாழ்வில் நமது

*ஆசீர்வாதங்கள் எப்போதுமே உபத்திரவத்துடன் கலந்ததாக இருக்கும் என்பதை அவர் உணர்ந்து இருந்தார், எனவே அவர் இனிவரும் வாழ்வை முன்னெதிர் நோக்கினார். அவர், "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" என்று கூறினார் (வசனம் 18). அவர் தமது வாழ்வின் முடிவை நெருங்குகையில், "கர்த்தர் எல்லாத் தீமையினின்று என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று எழுதினார் (2 தீமோத்தேயு 4:18).*

*"பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுதல்" என்ற வாக்குத்தத்தத்தின் நிறைவான நிறைவேற்றம் "*புதிய* வானம் மற்றும் *புதிய* பூமியில்" - இது பரலோகத்தில் தேவனுடைய இருப்பிடமாகவே உள்ளது - வரும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க 2 பேதுரு 3:13). நாம் எவ்வாறாக இருக்க வேண்டும் என்று பிரயாசப்படுவதற்கு இதைக் காட்டிலும் பெரிய ஊக்குவிப்பு இருக்க முடியாது.*

## *முடிவுரை*

*"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (மத்தேயு 5:5). நீங்கள் பூமியை "சுதந்தரித்துக்கொள்ள" - இந்த பூமி அளிப்பவற்றில் மிகச்சிறந்தவற்றை மகிழ்வுடன் அனுபவிக்க* மற்றும் *"புதிய பூமியை" முன்னெதிர்நோக்க - விரும்புகிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் மென்மையும் எளிமையுமாக (சாந்தகுணம் உள்ளவர்களாக) இருக்க வேண்டும்.*

*மென்மையும் எளிமையுமாக இருத்தல் என்பது மென்மையாகப் பேசுதல் மற்றும் பிறரிடத்தில் இரக்கமாயிருத்தல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் வையுங்கள். இந்த பாக்கியமானது தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகிறது என்பதால், இது பாக்கியங்களிலேயே மிகவும் கடினமான பாக்கியம் என்று சிலர் கருதுகின்றனர். மேட்டிமையுள்ள நபர், தேவனிடத்தில் "எனக்கு நீர் தேவையில்லை, உமது வழியும் தேவையில்லை" என்று கூறுகிறார். மென்மையான/எளிமையான நபர், "தேவனே, நான் எனது பலவீனங்களை உணர்ந்து அறிகிறேன் மற்றும் உமக்கு அளிப்பதற்கு என்னிடத்தில் மதிப்புள்ள எதுவும் இல்லை என்பதையும் உணர்ந்திருக்கிறேன்; ஆனால் நீர் என்மீது அன்புகூர்ந்து, எனக்காக உமது குமாரனை மரிக்கக் கொடுத்து இரட்சிப்பின் வழியைத் தெளிவாக்கினீர், அதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இப்போது நான் உமது சித்தத்திற்கு என்னைத் தாழ்மையுடன் ஒப்புக்கொடுக்கிறேன்." என்று கூறுகிறார். நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இராவிட்டால், அல்லது நீங்கள் விசுவாசத்தில் இருந்து விலகிப்போயிருந்தால், இன்றே கர்த்தரிடம் வருவதன் மூலமாக உங்கள் தாழ்மையைக் காண்பியுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]NASB வேதாகமம், "gentle/meek" என்பதற்கான கிரேக்க வார்த்தையை "gentle"

என்றே வழக்கமாக மொழிபெயர்க்கிறது, ஆனால் இந்தப் பதிப்பு அவ்வப்போது இந்த வார்த்தையை "meekness" என்று தரவழைக்கிறது (காண்க 2 கொரிந்தியர் 10:1). [2]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 534. [3]Adapted from Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 930. [4]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 23. [5]"Gentle men" என்பதைப் பற்றி நான் நினைக்கையில், எனது மனமானது மென்மையான கிறிஸ்தவரான ஹியூகோ மெக்கார்டு பற்றி நினைவுக்குச் செல்கிறது. [6]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 401. [7]McCord, 23-24. [8]Vine, 401 (emphasis mine). [9]Bromiley, 930. [10]வில்லியம் பார்க்ளே என்பவரின் *The Gospel of Matthew,* vol. 1, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1958), 91-92. என்ற புத்தகத்தில் இதைப் போன்றதொரு விளக்கம் தரப்பட்டுள்ளது.

[11]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 67. [12]எரேமியா, தாவீது, பேதுரு, ஸ்தேவான் மற்றும் பவுல் ஆகியோர், எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ள பிற உதாரணங்களில் உள்ளடங்குகின்றனர். [13]சாந்தகுணம் மீதான பல பிரசங்கங்கள், மோசே, கிறிஸ்து மற்றும் பிறர் என்பது போன்ற வேதாகமரீதியான உதாரணங்கள் மீது தங்களின் பெரும்பான்மையான நேரத்தைக் செலவிடுகின்றன. நீங்கள் இந்தப் பகுதியை விரித்துரைக்க விரும்பலாம். [14]மோசே, எகிப்தில் கண்காணியைக் கொலை செய்தார், கற்பலகையின் முதல் ஜோடியை உடைத்தார், கன்மலையிடம் பேசுவதற்குப் பதிலாக அதை அடித்தார். [15]எண்ணாகமம் 12:1ல் மிரியாம் முதலில் குறிப்பிடப்பட்டதை கவனியுங்கள். ஆரோன் பொதுவாக, ஒரு பின்பற்றாளராகவே இருந்தார். [16]இவ்வசனப் பகுதி, மிகப்பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் காணப்படுவதில்லை. ஆகவே வேதாகம மொழிபெயர்ப்பாளர்களால் இது அடைப்புக் குறிகளுக்குள் இடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டபடியே நடந்திருக்கலாம் என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். [17]இந்த வரலாற்றை முழுமையாக கூறுவதற்கு நேரம் எடுத்துக்கொள்ள நீங்கள் விரும்பலாம். [18]McCord, 26. [19]Joe Schubert, "The Meek," *Resources* 2 (1981): 13. [20]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 42.

[21]Quoted in Tolle, 43. [22]Adapted from Don Humphrey, *The Beatitudes* (Burlington, Mass.: Eternity Press, 1969), 31.